# பிராங்போர்ட் பள்ளி மற்றும் விமர்சன கோட்பாட்டின் முக்கியத்துவம்

**ஏ. எல். எம். றியால்**

*கலை கலாசார பீடம், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக் கழகம்*
*dralmriyal@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்**

இக்கட்டுரையானது பிராங்போர்ட் பள்ளியின் செயற்பாடுகளில் மாத்திரம் தன் கவனத்தை செலுத்தாமல் அதனுடன் இணைந்ததான சமகாலத்தின் விமர்சன கோட்பாடு தொடர்பாக ஆராய்வதை தன் அடிப்படைக் நோக்கமாகக் கொண்டுள்ளது. பின்நவீனத்துவ சிந்தனைகளுக்கு எதிராகத் தோற்றம் பெற்ற கடுமையான பிரச்சினைகள் தொடர்பாகவும் இக்கட்டுரையானது ஆர்வத்துடன் ஆராய முற்படுகிறது. மேற்கத்தேய உலகில் 1923இல் முதன்முதலாக பிராங்போர்ட்பள்ளி மார்க்சிஸிய ஆய்வுகளுக்குரிய கல்வி நிறுவனமாக தோற்றம் பெற்றது. காண்ட்இ ஹெகல்இ மார்க்ஸ்இ பிராய்ட்இ வெபர்இ மற்றும் லூகாஸ் போன்ற பல்வேறு சிந்தனையாளர்கள் படைப்புகளில் இருந்து கற்றுக்கொண்டதை ஒன்றிணைக்க இப்பள்ளியின் முக்கிய நபர்கள் முயன்றார்கள். மார்க்சியக் கொள்கையைப் புதியதொரு நோக்கில் செழுமைப்படுத்தியவர்களாகவும் இப்புலத்தினர கருதப்படுகின்றனர். இக்கட்டுரையுடன் தொடர்புடைய நூல்கள், கட்டுரைகள் போன்றன சான்றாதாரங்களாக அமைகின்றன. பகுப்பாய்வு மற்றும் விளக்கவியல் ஆகிய அணுகுமுறைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. விமர்சன கோட்பாடுகளின் இரு அம்சங்களின் மீது இக்கட்டுரையானது கவனம் செலுத்துகின்றது. முதலாவது, தியோடர் அடோர்னோ மற்றும் மக்ஸ் ஹொாக்கன்கைய்மர் இருவரினதும் இயங்கியல் மறுமலர்ச்சியில் விமர்சன கோட்பாட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரந்துபட்ட அணுகுமுறைகள். இரண்டாவது, இவ் அணுகுமுறையின் விரிவான அறிவார்ந்த கருத்துக்கள் மற்றும் ஹெர்பர்ட் மார்க்யூஸினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. எனவே இவ்வாய்வு 21ம் நூற்றாண்டில் விமர்சன கோட்பாடுகளின் போக்கின் ஆரம்பத்தைத் தோற்றுவித்த இவ்அம்சங்களை முன்வைக்க முயலுகின்றது.

திறவுச் சொற்கள் - பிராங்போர்ட்பள்ளி, மார்க்ஸ், விமர்சன கோட்பாடு, தியோடர் அடோர்னோ, மக்ஸ் ஹொாக்கன்கைய்மர்.

**அறிமுகம்**

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த சிந்தனையாளர்களுள் ஜெர்மனியைச் சேர்ந்த பிராங்பர்ட் சிந்தனைப் புலத்தினருக்குத் தனி இடமுண்டு. இவர்கள் பிராங்பர்ட் நகரிலிருந்த சமூக ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த அறிஞர்கள். இவர்களுள் மெய்யியலாளர்களும், கலாச்சார விமரிசகர்களும், சமூக விஞ்ஞானிகளும் உண்டு. இச்சிந்தனைப் புலத்தைச் சேர்ந்தவர்களாக உடனடியாக அடையாளம் காணப்படுபவர்கள், தியோடர் அடோர்னோ வுாநழனழச யுனழசழெ (1903-1969)இ மக்ஸ் ஹொாக்கன்கைய்மர் Max Horheimer (1895-1973)மற்றும் ஹெர்பர்ட் மார்க்யூஸ் Harbert Marcuse (1898-1974) ஆகியோர் காணப்பட்டனர். பிராங்போர்ட் பள்ளியுடன் தம் தொடர்பை வால்டர் பெஞ்சமின் (Walter Benjamin, 1892 –1940),முக்கிய பின்னைய பிராய்டிய சமூகக் கோட்பாட்டாளரான லியோ லொண்தால் (Leo Lowenthal 1900-1993) மற்றும் எரிக்பிரோம் (Erich Fromm 1900–1980) போன்றோரும் பேணிவந்தனர். இவர்களுக்கு அடுத்த தலைமுறையினருள் முக்கியமானவர் யூர்கன் ஹேபர்மாஸ் (Jurgen Habermas-1929). 1924இல் இப்புலம் தொடங்கப்பட்டது. மார்க்சியக் கொள்கையைப் புதியதொரு நோக்கில் செழுமைப்படுத்தியவர்கள் இப்புலத்தினர்.

பிராங்பர்ட் சிந்தனைப் புலத்தினர் சமூகக் கொள்கைகளுக்குள் மையமான ஒன்றாக வெகுஜனச்சாதனங்களின் பங்கினை மதிப்பிட்டனர். உலகம் முழுவதும் மரபுவழி மார்க்சியம்



ISBN 978-955-627-120-1

பெரும் மாற்றங்களுக்குள்ளான நிலையில், அதன் கணிப்புகள் பொய்த்துப்போன நிலையில், பிராங்பர்ட் சிந்தனைப் புலத்தினரின் கருத்துகள் பெரும் வரவேற்புப் பெற்றன.

பயங்கர சூழ்நிலை காரணமாக அனைத்து யூதர்களும்இ பெரும் நாசத்திலிருந்தும்இ நாஜி படுகொலையில் இருந்து தப்பியோடியதால் பிராங்போர்ட்பள்ளி 1934இல் நியூயார்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தில் இந்த நிறுவனம் மீண்டும் உருவானது. சமகாலத்தில் அதிகமாகப் பேசப்படும் முக்கிய சமூகக் கோட்பாட்டாளரான ஜூர்கன் ஹாபர்மாஸ் பெருமளவிற்கு ஒரு மாணவராக இருக்கும்போது இப்பள்ளியின் கவர்ச்சி ஹாபர்மாஸில் ஏற்பட்டது. இவர் இக்கல்வி நிறுவனம் பற்றி குறிப்பிடும் போது ''தன் ஊகங்களுடன் இணைந்த இயங்கியல் சிந்தனைக்கு அதி செல்வாக்குச் செலுத்தியது பிராங்போர்ட் பள்ளி ஆகும்'' என்றார்.

1930 மற்றும் 1944 காலப்பகுதியில் நாசிச மற்றும் பாசிச சக்திகளின் செல்வாக்கின் தங்களுடைய அவநம்பிக்கை சார்ந்த மனநிலையின் வெளிப்பாடுகள்தான் பிராங்போர்ட் பள்ளியின் மையக்கருத்துகளாகவும் மற்றும் பிரச்சினைகளாகவும் வெளியிடப்பட்டுள்ளன. அதனை அவர்கள் ஊக்குவித்து வந்தனர். டேவிட்கெலட் David Held (1980) இது தொடர்பாக மிக பயனுள்ள கேள்விகளை முன்வைத்தார். அவையாவன

1.ஐரோப்பிய தொழிலாளர் இயக்கங்களின் வளர்ச்சியை எது முடக்குகிறது?
2.முதலாளித்துவத்தின் நெருக்கடிகளை எப்படி சிறப்பாக புரிந்து கொள்ள முடியும்? பொருளாதார மற்றும் அரசியல் இடையிலான உறவுகள் எவை?
3.எதேச்சதிகாரத்தையும்இ அரசு பணித்துறையின் அபிவிருத்தியையும் எவ்வாறு விளங்கிக் கொள்ள முடியும்?
4.எவ்வாறு நாசிச மற்றும் பாசிச இயக்கங்கள் வெகுஜன பேராதரவைப் பெற்றுக்கொண்டன?
5.எவ்வாறு சமூக உறவுகள்இ குடும்பம்இ மாற்றங்கள் என்பன தனிநபரின் விருத்தியில் செல்வாக்கு செலுத்துகின்றன?
6.புதிய விதமான கருத்தியலுக்கு கலாசார அமைப்பும் அதன் கீழ்ப்படுத்தப்பட்ட விடயங்களை நாளாந்த வாழ்வில் கையாள்வதற்கு எவ்வாறு துணைபுரிகின்றன? இவற்றை எவ்வாறு வாழ்வில் பொறுத்துப் போக முடியும்?

7.மார்க்சிஸம் ர்'யாவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் பரவிக்கொண்டுள்ளதால் மரபுசார்ந்த சமூகப் பழக்கங்கள் அழிந்து விடுமா? (Held, p.35). என்பன டேவிட் கெலட்டின் பிரதான கேள்விகளாகும்.

அரசியல் பொருளியல் சார்ந்த விமர்சன கோட்பாடுகள்இ மெய்யியல் வரலாறு சார்ந்த விமர்சன கோட்பாடுகள்இ இரசனையியல் சார்ந்த விமர்சன கோட்பாடுகள், உளப்பகுப்பாய்வு சார்ந்த விமர்சன கோட்பாடுகள் என்பவற்றின் ஊடாக இத்தகைய ஆழமான கேள்விகளுக்கான விடைகளை பிராங்போர்ட் பள்ளியானது மதிப்பிட்டது.

விமர்சன கோட்பாடுகளின் இரு அம்சங்களின் மீது இக்கட்டுரையானது கவனம் செலுத்துகின்றது. முதலாவது, தியோடர் அடோர்னோ மற்றும் மக்ஸ் ஹொக்கன்கைய்மர் இருவரினதும் இயங்கியல் மறுமலர்ச்சியானது எதிர்கால வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள ஒட்டுமொத்த விமர்சன கோட்பாட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரந்துபட்ட அணுகுமுறைகள். இரண்டாவது, இவ் அணுகுமுறையின் விரிவான அறிவார்ந்த கருத்துக்கள் மற்றும் ஹெர்பர்ட் மார்க்யூஸினால் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் போன்றவற்றில் கவனம் செலுத்துகின்றது. எனவே இவ்வாய்வு 21ம் நூற்றாண்டில் விமர்சன கோட்பாடுகளின் போக்கின் ஆரம்பத்தைத் தோற்றுவித்த இவ்அம்சங்களை முன்வைக்க முயலுகின்றது.



ISBN 978-955-627-120-1

**விமர்சன கோட்பாடு என்பது யாது?**

அடிப்படையாகவே விமர்சன கோட்பாடு என்பது உண்மையை மையப்படுத்திய குறுகிய புலனறிவாதம் என்றும், ஆய்வு எல்லைப் பரப்பைக் கொண்ட உரையாடல் எனவும் வரையறுக்கலாம். 19ம் நூற்றாண்டின் சமூகவியலாளரான மாக்ஸ் வெபரின் (Max Weber) செயற்பாடுகளின் காரணமாக புலனறிவாதிகள் தமது செயற்பாடுகளில் பல்வேறுபட்ட அர்த்தங்களையும் காரணங்களையும் அவற்றின் பொருள் ஊடாகவும் நோக்கங்கள் ஊடாகவும் பிரதிபலித்தனர். சமூக உறவுகளைக் கட்டமைப்பதில் தடையாக அமைகின்ற செயற்பாடுகளை உறுதியான வழிமுறைகள் மூலம் இல்லாது தவிர்க்கலாம். உதாரணமாக கருத்தியலின் படி உறவுகளின் ஆதிக்கத்தை முறைப்படி தவிர்க்க விளைகின்ற போது வேண்டுகோள்இ கோரிக்கை மூலம் நாளாந்த வாழ்வில் அணுகுமுறையின் அடிப்படையில் சமூக உறவுகளை நிலைநிறுத்த வேண்டும்.

செயலாக்க நிகழ்வுகள் வெவ்வேறு திசையில் இடம் பெறுகின்றன. அதாவது சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும் அரசியலமைப்பின் கருத்துக்களானது, இயல்பான அனுபவங்களுடனும் உணர்வுகளுடனும் தொடர்புபட்டு மக்களுடைய மனப்பாங்கினை மாற்றும் வகையில் பராமரிப்பு செய்யப்பட்டு வருவதற்கு வரலாற்று எண்ணக்கருக்கள் காரணமாக விளங்குகின்றன.

அனுபவம் இயங்கியல் மக்களிடையே உள்ளுணர்வு சார்ந்த, வரலாற்று கருத்தாக்கங்களை வடிவமைத்தல், பராமரிப்பு மற்றும் மாற்றங்களின் பகுப்பாய்வு மூலம் சமூக அமைப்பில் முரண்பாடுகள் மறுக்கப்படுவதை சவால் செய்வதன் மூலம் வரலாறு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றின் ஒரு விமர்சனரீதியான பிரதிபலிப்பைப் பெறும் வாய்ப்பை அனுமதிக்கும் வகையில். மரபுவழி எவ்வாறு கட்டமைக்கப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் மரபுகளின் கட்டமைப்பை மட்டுமின்றி மரபு கருத்தியல் நிலையும் அறிவது அவசியமாகும். ஏனேனில் எண்ணங்கள் தவறான மற்றும் ஏமாற்ற உறவுகளின் கருத்தமைவுடன் தொடர்புபட்டு காணப்படுகின்றது.

முழுமையாக அணுகுமுறையின் மூலமாக நோக்கினை அடைவதற்காக மதிப்பீடு செய்து போட்டியிடுகின்ற யதார்த்த நிலையானது கருத்துசார் அம்சங்களை வெளிக்கொணர்வதனால் புலனறிவாதமானது பிழையான ஒரு ஆயுதமாகத் திகழ்கிறது. முன்னைய ஆக்கிரமிப்புக்கள் பற்றிக் கேள்விகளானது எதிர்கால செயற்பாடுகளின் வளர்ச்சிக்கு பயன்படும் விதமாகக் காணப்படும் என ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ ஆகிய இருவரும் தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். இவ்விடயம் பற்றிய கேள்விகள் ஏற்கனவே David Held (1980) சிந்தனையிலும் பிரதிபலித்திருந்தது.

**மக்ஸ் ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ அறிவொளியின் இயங்கியல்**

மக்ஸ் ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ ஆகியவர்களின் அறிவொளியின் இயங்கியல் வளர்ச்சி, குறிப்பிட்ட கருப்பொருளின் அடிப்படையில் பல்வேறு நிறுவன அங்கத்தவர்களால் தனித்தனியாக அபிவிருத்தி செய்யப்பட்டு 1944இல் கடுமையான் நாசிச யுத்த காலப்பகுதியில் பலதரப்பட்ட ஆக்கங்கள் எழுத்தாகப் பதிப்பிக்கப்பட்டன. அவற்றை முதலாவதாக, வெகுஜன கலாசார தொழில்வாய்ப்பு இரண்டாவதாக, அறிவொளி மெய்யியல், புலனறிவாதம் மற்றும் கருவியாக சிந்திக்கும் திறன் மூன்றாவதாக யூத எதிர்ப்பு, பாசிசம், எதேச்சாதிகாரம் மற்றும் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் பிரயோகம் என வகைப்படுத்தி அறிய முடியும்.

ஹொர்க்ஹைமரும் அடோர்னோவும் இணைந்து எழுதிய முக்கியமான நூல், ‘அறிவொளியின் முரண்வளர்ச்சி ∴அறிவொளியின் இயங்கியல்’ (Dialectic of Enlightenment) என்பது. ‘‘மேலை அறிவும் விஞ்ஞானமும் பொருள் உற்பத்தியும் தொழில் உற்பத்தியும் மானிட விடுதலையையோ சமத்துவத்தையோ நிலைநாட்ட வில்லை. மாறாக, ஆ‘விட்ஸ் (Auschwitz) , டாகாவ் (Dachau) போன்ற சித்திரவதை முகாம்களைத்தான் உருவாக்கின’’ என்று இவர்கள் கூறுகிறார்கள். மனித



ISBN 978-955-627-120-1

குலம் நாகரிகம் அடைவதாகிய செயல்முறை, இயற்கையை மனிதன் வெற்றிகண்ட முதல் செய்கையிலிருந்து தொடங்கியது. படிப்படியாக வளர்கின்ற பொருளுறவாக்கலின் (மனிதனைப் பொருளாக்கலின்) தர்க்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. இப்பொருளுறவாக்கலின் தர்க்கம், தன் இறுதி விளைவான பாசிசத்தில் முடிகிறது என்பதுதான் அறிவொளியின் இயங்கியல் என்னும் நூலின் மையக்கருத்து. ஹெபர்பர்ட் மார்க்யூஸ், ஹேபர்மாஸ் இருவரும் இந்நூலில் முன்வைத்த மிக முக்கியமான கருத்து கலாச்சாரச் சந்தை (Culture Industry) என்பது. வெகுஜனக் கலாச்சார உற்பத்தியை இச்சொல் குறிக்கிறது.

பிந்திய முதலாளித்துவக் காலத்தில் (இதில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்) எல்லாப் பொருட்களும் சந்தை மயமாக்கப்பட்டு விடுகின்றன. இந்நிலையில் கலையும் மிகுதொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் சந்தைப் பொருளாக மாறிவிடுகிறது. இதில் விளம்பரம், திரைப்படம், தொலைக்காட்சி போன்ற யாவும் அடங்குகின்றன. இவை யாவும் தனிப்பட்ட பொருட்களை விளம்பரப்படுத்துகின்றன என்பதை விட ஒரு முதலாளித்துவ வாழ்க்கை முறையை விளம்பரப் படுத்துகின்றன என்பது பொருந்தும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெற்ற பயன்மதிப்பின் சுதந்திரம், மானிடத் தன்னிலைக்குச் சுதந்திரத்தையும், முதலாளித்துவ நுகர்வுக்கெதிரான கட்டுப்பாட்டையும் அளித்தது. இப்போது இச்சுதந்திரம் அடியோடு இல்லாமல் போய்விட்டது. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்குமான முரண்பாடு, முதலாளித்துவத்தைக் காலப்போக்கில் வீழ்ச்சியடையச் செய்யும் என்று மார்க்ஸ் நினைத்தது இன்று பொய்யாகிப் போய்விட்டது. கலாச்சாரச் சந்தையில் மனிதன் காணாமல் போய்விட்டான்.

வெகுஜன கலாசாரம் மற்றும் கலாசாரத்தைக் காத்தல் ஆகிய நடைமுறைகள் முதலாளித்துவம் மற்றும் சந்தைப்போக்கின் காரணமாக கடத்தப்படுகின்றன என அவர்கள் வாதிட்டனர். அதாவது தற்கால மாணவர்களின் போக்கிற்கு வலுவூட்டும் அம்சமாக இன்றைய ஊடகம் திகழ்கிறது. கலாச்சாரத்தின் புதிய வடிவங்கள், சக்திவாய்ந்தவர்களின் சார்பான நிலைமைகளை உருவாக்கி, அத்தகைய கலாச்சாரம் நுகர்வோர் மீது சார்பான தேவைகளை உருவாக்குகின்றன.இதன்பின் வர்த்தகக் கலையின் குறிக்கோள் விமர்சனத்துக்குரியதாக இருந்தது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். கருத்தியல் அடிப்படையிலேயே அதன் உற்பத்தி நடைபெற்றதால் அவ்உற்பத்திகளது அதிகப்படுத்தல்கள் மற்றும் வலுப்படுத்தல்கள் போன்றன யதார்த்தத்தை நோக்கி இயங்கின.அடோர்னோவின் பிந்தைய எழுத்துக்களானது கலாசார சமதளம் மற்றும் அழகியலின் மரபுசார் அல்லது அடித்தளத் கருத்தியல் என்பவற்றை மிகவும் அடையாளப்படுத்துகின்றன.

வரலாற்று மெய்யியலில் முறைபடுத்தல் மற்றும் முக்கியமான புலனறிவாத விமர்சனம் போன்றவற்றை அறிவொளி மற்றும் விஞ்ஞானம் போன்றவற்றுடனும் பிரான்சில் பேகனின் கருத்துக்களில் இருந்து தோன்றிய, இயற்கையின் மேலாதிக்கம் மற்றும் பிற மனிதர்களைப் பற்றிய கருத்துக்களையும் ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ விவாதத்துக்கு உட்படுத்தினர். உண்மையில், இயற்கையின் மீதான ஆதிக்கம் அறிவொளி பற்றிய மெய்யியலின் இதயத்தில் உள்ளது. ஒரு முறை விடுவிக்கப்பட்ட காரணம் ஒரு பிற்போக்குத்தனமான மரபார்ந்த வடிவமாக மாற்றப்பட்டுள்ளது: அறிவொளி காலத்தில் பிற்போக்கான மதக் கோட்பாடுகளின் நம்பிக்கை போக்கானது சர்வாதிகாரத்தனமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஏன் இத்தகைய காரணிகள் ஒருங்கிணைந்து புராணத்தை புதுவடிவமாக அறிவொளி காலத்தில் மாற்றுகிறது. விஞ்ஞானம் மற்றும் மெய்யியலில் மூலம் காரணகாரிய அடிப்படையில் தினந்தோறும் ஏற்படும் எல்லை மீறப்பட்ட எண்ணிக்கை இடவெளியானது புராணத்துக்குக் காரணமாக விளங்குகின்றது.

முறையான சுரண்டல் பற்றிய அறிவின் புதிய வடிவங்கள் முதலாளித்துவத்தின் பொருளாதார விருத்தியின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்று ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோவால் மேலும் விவாதத்திற்கு உற்படுத்தப்பட்டது.முழுமையான பொருளாதார முறையானது இயற்கையின் மீது ஆர்வம் கொள்கிறது. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவானது குறிப்பிடத்தக்க வகையில் இன்றியமையாத உறவாகவும் இயற்கைசார் எண்ணக்கருவையும் மற்றும் இயற்கை மீதான ஆதிக்கத்தையும் குறித்துக் காட்டுகிறது.



ISBN 978-955-627-120-1

மக்ஸ் ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ போன்றோர் காண்ட் Kant,(1724-1804) இ மார்கோனி டி சேட்டி (Marquies, De Sade ,1740–1814), மற்றும் நீட்சே (Nietzsche,1844-1900) ஆகிய எழுத்தாளர்களின் மறுமலர்ச்சி கால கருத்தியல் அமைப்புகளை தெளிவாக அடையாளப்படுத்த தீர்மானித்தனர். (Adorno and Horkheimer, 1972,pp. 81-119)காண்ட்இ மார்கோனி டி சேட்டி மற்றும் நீட்சே போன்றவர்களின் செயற்பாடுகளில் கீழ், மேல் அடிப்படை வேறுபாடுகள், மனிதத்துவம் மற்றும் இயற்கை உலகில் சட்டரீதியான அடிமைப்படுத்தல்கள் மற்றும் ஆண் பெண் அடிப்படையில் பொருளமைவுக்கான பரிகாரம் என்பன தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றன (Held, 1980,p.157). இந்த அடிப்படையில் தாராளவாதத்தின் மூலங்கள் மற்றும் சர்வாதிகார சிந்தனை அத்தோடு இணைந்த பயிற்சி என்பவற்றுக்கு இடையில் பெறப்பட்ட பெறுபேறுகளின் தொடர்ச்சியானது ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோவால் ஆகியோரால் பராமரிக்கப்பட்டு வந்தமையானது ஹெர்பர்ட் மார்க்யூஸினால் மீள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தாராளவாதம் மற்றும் ஜனநாயகத்தின் மீதான அவரது பாய்ச்சல்கள் சர்ச்சைக்குரிய ஆய்வுக் கட்டுரையாக வெளிவந்தது. (see de Sade) இதற்கான நீட்சேயின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானத்தில் புலனறிவாத செல்வாக்குக்கு எதிரான இவர்களுடைய தீவிர தாக்குதல்களால் நவீன விஞ்ஞானமானது அறிவொளி காலத்தில் முழுமை பெறத் துணைபுரிவதுடன் விமர்சன ரீதியான தாக்குதலை விட தொழில்நுட்பச் செயல்முறை அற்ற சூழல் ஆதிக்கத்துக்கான கருவியாக தொழிற்பட்டது (see MacIntyre,1970).

அறிவொளி காலத்தில் இயங்கியலில் யூதர்களுக்கு எதிரான போக்குப் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டு வந்ததுபி.168-201). முதலாளித்துவம் சார்ந்தோர் யூத எதிர்ப்பு கொண்டவர்களாக இருந்ததுடன் ஒரு குறிப்பிட்ட பொருளாதார உத்வேகத்துடன் மறைமுகமாக உற்பத்திகளில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். முதலாளித்துவ வர்க்கம் உற்பத்தியின்மையை சமூகத்தின் நோய்கள் என வெறுத்தனர். நாசி ஜேர்மனியில் யூதர்களும் இத்தகைய குற்றச்சாட்டுக்கு உள்ளானார்கள். இருப்பினும், யூதர்கள் குற்றம் சாட்டப்பட்டதற்கு அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. முழு வர்க்க அமைப்புமுறையிலும் அநீதி இழைக்கப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது எவ்வாறு இருப்பினும் ஹொக்கன்கைய்மர் மற்றும அடோர்னோ போன்றோர் விளக்கிய பகுத்தறிவான பொருளாதாரத்தில் இது பற்றிய போதிய விளக்கம் காணப்படவில்லை என்கின்றனர். உளப்பகுப்பாய்வுக் கோட்பாடானது எவ்வாறு யூதர்கள் பெருந்திரளான மக்கள் கூட்டத்தில் தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்பதற்கு விளக்கம் அளிக்கிறது. யூத எதிர்ப்பானது மக்களிடத்தில் திட்டமிடப்பட்ட பயத்தையும் வெறுப்புணர்வையும் வெளிப்படையாக ஏற்படுத்தி இருந்தமையால் அவதானிக்கத்தக்கதாகக் காணப்பட்டது. உதாரணமாக, வாழ்க்கையை கையாளுவதில் ஏமாற்றம் மற்றும் இயலாமையின் உணர்வுகள் வெளித்தோற்றத்தில் திறன் வாய்ந்தவை மற்றும் திறனுள்ளவர்களிடையே இருக்கும். யூத எதிர்ப்பு இயக்கமானது யூதர்களின் அழிவை நோக்கித் தள்ளியதுடன் யூதர்களை விலங்குகளில் நின்றும் குறைவானவர்களாக கணித்தது. உணர்வற்ற நிலைஇ பிற்போக்கான செயற்பாடு, குடும்ப கலாசாரம் மற்றும் பொருளாதாரம் என்ற எல்லா நிலைகளிலும் தோற்றம் பெற்றிருந்தது. இவ் எதிர்ப்பானது கருத்தியலாக மட்டும் அமையாது. முதலாளித்துவத்திற்கு முற்பட்ட கிறிஸ்தவ நம்பிக்கைகள் ஊடாக இயற்கையான காரணிகளால் முழுமையாக விருத்தி செய்யப்பட்டு வந்தது எனக் கூறமுடியும்.

சுருக்கமாக, அறிவொளி இயங்கியலின் இயல்பான தன்மையின் முக்கியத்துவத்தை எப்படி மதிப்பீடு செய்யலாம்? இயங்கியல் சார்ந்த மறுமலர்ச்சியை சுருக்கமாகக் குறிப்பிடும் போது 1940 நடுப்பகுதியில் மத்திய ஐரோப்பிய இருள் சூழ்ந்த நிலையினை மறுத்து அறிவொளி இயங்கியலின் அடிப்படைக் கோட்பாடுகளின் சிந்தனையை மட்டுமே மைல்கல்லாக ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோவால் ஆகியோரால் எஞ்சி வைத்திருந்துத (Bronner,2002). அறிவொளியின் இயங்கியல் ”தீவிரவாத சிந்தனையின் ஒரு அடையாளமாக உள்ளது. (பி.86) ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ ஆகியோர் உயர்ந்து வரும் நடுத்தர வகுப்புக்களின் அபிலாஷகளுக்கு ஒரு கருத்தியல் வழிவகையாக அறிவொளியையும் கண்டனர்.



ISBN 978-955-627-120-1

இருப்பினும் அவர்கள் அறிவொளி திட்டத்தின் மூடநம்பிக்கை, புராணம், மற்றும் பாரபட்சம் போன்ற பாரிய பாத்திரத்தை எதிர்ப்பதில் பார்வை இழக்கவில்லை.தினந்தோறும் வாழ்வில் ஏற்படும் அரசியல் பிரச்சினைகளால் மரபுகளுக்கு அடிபணியாத நிலை தொழில்நுட்பக் காலனித்துவ காலத்தில் ஏற்பட்டது. குடியுரிமையியல;, அரசியல், சர்வதேசவியல் என்பன பகுத்தறிவான தொழில்நுட்ப விருத்தி காரணமாக அறிவொளியில் உயரிய போக்கை ஏற்படுத்தியமை அரசியல் பகுப்பாய்வின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இவற்றை ஹொக்கன்கைய்மர் மற்றும் அடோர்னோ தெளிவாக குறிப்பிட்டுள்ளார் (2002,p.87).

இவ்வாய்வின் இரண்டாம் பகுதி விமர்சன சிந்தனையாளரான ஹெர்பர்ட் மார்க்யூஸினால் புது நகர்வினை நோக்கி நகர்த்தப்படுகிறது.

**ஹெர்பர்ட் மார்க்யூஸ் : ஒற்றைப் பரிமாண மனிதன்.**

1898ல் பெர்லினில் பிறந்து 1979ல் கலிபோர்னியாவில் மரணித்த ஹெர்பர்ட் மார்க்யூஸ் ஒரு அரசியல் விமர்சகராகவும், மெய்யியலாளராகவும் மற்றும் நவமார்க்சியக் கருத்தாளராகவும் திகழ்தவராவார். புதிய இடதுசாரிகளின் தந்தை எனப் போற்றப்படும் ஹெர்பர்ட் மார்க்யூஸ் முதலாளியத்தையும் நவீன தொழில் நுட்பத்தையும் அதிகரித்து வரும் பொழுதுபோக்கு பண்பாடுகளையும் விமர்சனம் செய்தார்.ஆரம்ப காலங்களில் ஹைடக்கரிடம் பணிபுரிந்தவர். அவரிடம் கருத்து வேறுபாடு முற்றவே அவரை பிரிந்து பிராங்பர்ட் பள்ளியில் சேர்ந்தார். 1930 காலப்பகுதிகளில் ப்ராங்பேர்ட் பள்ளியில் உள்ள ஏனைய யூதர்களுடன் இணைந்து அடோர்னோ மற்றும் ஹொக்கன்கைய்மர் போன்றோருடன் நாசிஸ்டுகளிடமிருந்து தப்பியோடினர். எஞ்சிய காலப்பகுதியில் அமெரிக்காவில் மெய்யியலையும் அரசியல் சிந்தனைகளையும் கற்பித்தார். இவரின் பிந்திய சிந்தனைகள் காலத்தின் கட்டாயமாகக் காணப்பட்டது. அமெரிக்காவில் முதலாளித்துவ சமுதாயத்தின் செழுமையை அரசியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய அதே நேரத்தில் 1930 களில் ப்ராங்பேர்ட் பள்ளியில் பாசிசவாதிகள் மற்றும் நாசிசவாதிகளின் சர்வாதிகாரப் போக்கிற்கு ஒப்பீட்டு முன்னைய அனுபவங்களின் அவநம்பிக்கைகளையும் ஆராய்ந்தார். பிற்பாடு, மார்குஸின் கருத்துக்கள் அந்த நேரத்தில் தேவைகளை பூர்த்தி செய்தன.

வெகுஜனச் சாதனங்கள், குறிப்பாகத் திரைப்படம், தொலைக்காட்சி இரண்டும்-போலியான தேவைகளை உருவாக்குகின்றன. ஒற்றைப் பரிமாணச் சிந்தனையை உருவாக்குகின்றன. மக்களை இயல்பாகத் தங்கள் பணிகளிலும் சமூக உறவுகளிலும் ஈடுபடமுடியாதவாறு செய்கின்றன. இன்றைய சமூகம், மனிதத்தன்மையை அற்றுப் போகச் செய்து, மனிதர்களை அந்நியப்படுத்துகின்றன. நவீன தொடர்புச் சாதனங்கள் மக்கள் வாழ்க்கையிலுள்ள குறைகளை மறைக்க அல்லது தங்களையே மறந்துபோக உதவி செய்கின்றன. என ஹெர்பர்ட் மார்க்யூஸ், ஒற்றைப் பரிமாண மனிதனில் குறிப்பிட்டார்.

சமூகவியல் ஆய்வுகளில் இருபோக்குகள் உண்டு. ஒன்று எமிலி டர்க்கெய்ம் என்ற பிரெஞ்சு சமூகவியலாளர் உருவாக்கிய வகை. மற்றது மார்க்ஸ் வேபர் என்ற ஜெர்மானிய சமூகவியலாளர் உருவாக்கியது. முதலாவது சமூக அமைப்பை முன்வைத்து பேசுவது. இரண்டாவது தனிமனிதர்களின் சமூக நடத்தையை முன்வைத்து பேசுவது. ஒற்றை பரிமாண மனிதன் என்ற இந்த புத்தகம் இரண்டாவது வகையை சார்ந்தது. முதல் வகை நேர்க்காட்சி வாதத்தை முன்வைத்தது. அதாவது விஞ்ஞான பூர்வமாக சமூகத்தை ஆராய்வது. அதாவது இதில் தற்சார்பு முற்றிலும் இல்லை என்ற பாவனை உண்டு. முற்றிலும் புறவயமானது (objective). வேபர் வழி வந்த சமூகவியல் ஆய்வு நேர்க்காட்சி வாதத்தை மறுக்கிறது.அது தனிமனிதர்களின் சமூக நடத்தையை முதலில் எடுத்து அதன் மூலம் தன் ஆய்வுகளை மேல் எடுக்கிறது.

இன்றைய தொழில்மய சமூகத்தில் மனிதன் அந்நியப்படுகிறான். அப்படி அந்நியப்படும் மனிதன் தன்னை சூழ்ந்துள்ள சமூகத்தின் ஒடுக்குமுறையால் உன்னதமாக்கலுக்குள் செல்கிறான்.அவனது மகிழ்ச்சி அற்ற பிரக்ஞை உன்னதமாக்கலற்ற செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறது. உங்களின் வேலை நேரங்களை மட்டுமல்ல உங்களின் பொழுதுபோக்கும் நேரத்தையும் இந்த சமூகமே கவனித்துக்கொள்கிறது! மேலும் நம் சிந்தனை முறை மாற்றப்பட்டுவிட்டது.அதாவது



ISBN 978-955-627-120-1

தான் வாழ்ந்து கொண்டிருக்கும் சமூகம் நல்ல சமூகமே என்ற எண்ணம் நம்முள் எழுகிறது , எழுப்பப்படுகிறது. சொல்லாடல்களின் உலகம் மூடப்படுகிறது.இதற்கு அவர் முன்வைக்கும் முக்கிய காரணம் தொழில்நுட்ப பகுத்திறவு.மேலும் விட்கென்ஸ்டீன் போன்றோர் முன்வைத்த நேர்க்காட்சிவாத தர்க்க முறை ஒற்றை பரிமாண தத்துவத்திற்கு வழி வகுத்தது என்கிறார்.

இந்த ஒற்றை பரிமாண உலகில் இருந்து விடுதலையை இல்லையா என்றால் அது இந்த ஒற்றை பரிமாண உலகிற்கு வெளியே இருப்பவர்களுக்கும் இந்த மிக முன்னேறிய தொழில்மய சமூகத்தை ஆழப்புரிந்து கொண்ட அறிவுஜீவிகளும் சந்தித்து கொள்ளும் வாய்ப்பின் மூலம் இந்த விளையாட்டுக்கு எதிராக செயல்பட முடியும் என முடிக்கிறார் மார்க்யூஸ்.

பாசிசத்தின் தோற்றத்திற்கும் ஐரோப்பிய சமூகத்தில், குறிப்பாக ஜெர்மானிய வரலாற்றில் நீண்ட காலமாக வழக்கில் இருக்கும் உடன்பாட்டுக் கலாசாரத்திற்கும் ( affirmative culture) உட்தொடர்பு உள்ளதாக சொல்லும் மார்க்யூஸ் இடைக்கால ஜெர்மனியில் வழக்கிலிருந்த மேட்டுக்குடிக் கலாசாரத்தைத் தீவிரமாக மறுதலித்து ( negate ) விமர்சிக்காமல் அக்கலாசாரத்துடன் உடன்பட்ட நிலையிலேயே நவீன ஜெர்மானிய கலாசாரம் கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது என்கிறார். எனவே அதனை மார்க்யூஸ் உடன்பாட்டுக் கலாசாரம் என்கிறார். கலாசார வாழ்வில், இடைக்கால மேட்டுக்குடிச் சமூக விழுமியங்கள் ஆன்மீகம் என்ற அடைமொழியுடன் தங்கிநிற்கின்றன. அவை சராசரி மனிதனின் அன்றாட வாழ்விலும் அவ்வாழ்வின் தேவைகளிலும் அக்கறையின்றி அவற்றை இழிநிலையில் வைத்துப் பார்க்கின்றன.

சமூக முரண்பாடுகளையும் மக்கள் பிரச்சினைகளையும் இவ்வகைக் கலாசாரம், ஆன்மீகம் என்ற திரை போட்டு மறைக்கிறது. வாழ்க்கைத் தளத்தில் அல்லாது ஆன்மீகத் தளத்தில் மேற்குறித்த பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு இருப்பதாக அது பரிந்துரை செய்கிறது. உடல், உணர்ச்சிகள், சுய நலன்கள் ஆகியவற்றைக் கடந்த ஓர் உலகுக்குள் வருமாறு அது சகலரையும் அழைக்கிறது. சாதாரண மக்களுக்கு அது சாத்தியப் படாமற் போவதே சகல பிரச்சினைகளுக்கும் காரணம் என்றும் அது கூறுகிறது. ஆன்மீகக் கலாசாரம் அமைதியையும் நிம்மதியையும் சாந்தியையும் வழங்கும் என அது பிரச்சாரம் செய்கிறது. ஆன்மாவும் ஆன்மீகமும் உலகியல் ஈடுபாடற்ற, கட்டுப்பாடற்ற அதிகாரத்தின் புராதன வடிவங்கள். எந்த விதக் கேள்விக்கும் இடமின்றிச் சகலவற்றையும் ஆன்மா தனக்கு அடிமையாக்கும். பிரத்தியட்ச வாழ்க்கைக்கு அருகில் வரப் பிடிவாதமாக மறுத்து, வாழ்வால் ஒவ்வொரு கணமும் தீண்டப்படும் மனம், அறிவு ஆகியவற்றை ஏற்க மறுக்கும் ஆன்மீகத் தத்துவங்களைச் சிலாகித்துப் பாராட்டும் நாடுகளில் பாசிஸத்திற்கு வாய்ப்புண்டு என்றும் ஆன்மீகமயப்பட்ட சமூகத்தில் தனி மனிதர்கள் சர்வாதிகாரத்தை எளிதில் ஏற்றுக் கொள்ளுவர் என்றும் மார்க்யூஸ் கூறுவார். எனவே மனிதர்கள் தமது உணர்ச்சிகளைச் சமூக வரலாற்று யதார்த்தத்தோடும் சமூக மாற்ற நோக்கங்களோடும் இணைக்காமல் போகும் போது அவை பாசிஸமாக உருவெடுக்கும் என்று மார்க்யூஸ் குறிப்பிடுகிறார்.

ஹெகலினுடைய மரபுரீதியான கருத்துக்கள் மற்றும் மார்க்சிய மெய்யியலாளர் ஜோர்ஜி லூகாஸ் (புநழசபல டரமயஉளஇ1885-1971) போன்றோரின் சிந்தனைகளில் மூழ்கியிருந்த ஹெர்பர்ட் மார்க்யூஸ்இ 1933ல் முதன் முறையாக மார்க்சியக் கருத்துக்களில் கவனம் செலுத்தினார். 1844ல் கார்ல் மார்க்ஸின் ‘‘பொருளாதாரம் மற்றும் மெய்யியல் சார்ந்த கையெழுத்துப் பிரதிகள்’’ மனித நேயத்துக்கு மாற்று மருந்தாக உருவாக்கப்பட்டன. முதலாளித்து வத்தின் உழைப்புப் பிரிவினை காரணமாக அந்நியமாதல் ஏற்படுவதாகச் சொல்கிறார். பிற விலங்கினங்களிலிருந்து மாறுபட்டு, மனித இனம் தனது சூழ்நிலையை மாற்றும ஆற்றல் பெற்றிருப்பதால் வேறுபடுகிறது. சூழலை மாற்றுவதை வெறும் இயல்பூக்க உந்துதல் என்ற அடிப்படையில் அன்றி, பிரக்ஞை பூர்வமான செயல் மூலம் மாற்றுகிறது. உழைபபினால் சூழல் உருவாகத் தொடங்கிய பிறகு, அது இயற்கையான சூழலாக இருப்பதில்லை. பல தலைமுறை மக்களின் உழைப்பால் உருவான உலகத்தோடு நிகழ்த்தும் இடைவினைகள், மனித இனத்திற்குத் தனது சூழலை மட்டுமல்ல, தன்னையும் மாற்றிக்கொள்ளும் ஆற்றலை அளிக்கிறது. இப்படிப் புறப்பொருளை உருவாக்கும் செயல்பாடே உற்பத்தி எனப்படுகிறது. ஏனெனில் மனிதனின் உள்ளார்ந்த ஆற்றல் உற்பத்திப் பொருளின் புற வடிவத்தினை அடைகிறது. அப்போது மனிதத் தன்னிலையும் மாற்றம்



ISBN 978-955-627-120-1

பெறுகிறது. அந்நியமாதல் என்பது இப்புறப்பொருள் உற்பத்தியைக் கெடுத்து மானிட இனத்தின் சுயபுரிந்துகொள்ளலை அழிப்பதாகும்.

இதன் பின்னர் பொருளாதாரத்தில் ஆதிக்க படைப்பாக இருந்த மூலதனம் னுயள முயிவையட நூல் 1867 வெளிவந்தது. லெனினியவாதம் (Leninist) மற்றும் ஸ்டாலினியவாதம் (Stalinist) மரபு வகைச் சிந்தனையை நிரூபிப்பது மார்க்யூஸின் திடமான குறிக்கோளாக இருந்தது. இவரின் பிந்திய எழுத்துக்கள் ப்ராய்டின் உளப்பகுப்பாய்வின் உள்ளடக்கங்களைத் தனித்தனியாக விமர்சனத்துக்கு உற்படுத்தி தனது சுய விமர்சனத்தை அபிவிருத்தி செய்வதாக விளங்குகின்றது.

1960களில் பிராங்.ஃபர்ட் பள்ளி உட்பட குட்டி முதலாளித்துவ போக்குகள், நுகர்வோர்வாதத்தின் மூலம் தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமூகத்துக்குள் மூழ்கிப் போவது பற்றி மார்க்சிசத்துக்கு எதிராக முன்வைக்கின்ற கோட்பாடுகள் இந்த குழுக்களின் மூலம் இன்று நிரம்பி வழிகின்றது. மார்க்யூஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார்: ‘‘தம்மிடம் உள்ள பண்டங்களின் மூலமே மக்கள் தங்களை அடையாளங் கண்டுகொள்கின்றனர். அவர்கள் தங்களது சொத்துக்கள், ஆடம்பர பொருட்கள், வீடு மனைகள் மற்றும் சமயலறை உபகரணங்களின் மூலம் தமது ஜென்மத்தை காண்கின்றனர். தனி மனிதனை அவனது சமூகத்துடன் கட்டிப்போடும் இயந்திரங்கள் மாற்றமடைந்துள்ளன.’’

யுத்தத்துக்குப் பிந்திய காலத்திலான சமரசத்தினுள், உலக முதலாளித்துவத்துக்குள் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அடிபணிந்தே என்று இந்த நிலைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. உற்பத்தியின் பூகோளமயமாக்கத்துக்குள், புதிய தாராண்மை பொருளாதார வழிமுறை என்ற பல்வேறு திறந்த பொருளாதார கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நிலைமையில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களாகவே இந்தக்கருத்துக்கள் இப்போது முன்வைக்கப்படுகின்றன.

ஹெர்பர்ட் மார்க்யூஸ் விமர்சன கோட்பாடும் ஹெகலும்

1941ம் ஆண்டு காரணியும் புரட்சியும் (சுநயளழெ யனெ சுநஎழடரவழைெ)என்ற நூல் எழுதப்பட்டு 1968ல் மீண்டும் மறுபதிப்பு செய்யப்பட்டு பரவலாக வாசிக்கப்பட்டது. ஹெகலின் இயக்கவியல் கருத்துக்கள் மற்றும் மார்க்ஸின் தொழிலாளர் சிந்தனை ஊடாக முதலாளித்துவ சமூகத்திலுள்ள மனித உறவுகள் பற்றிய விமர்சன விசாரணை ஒன்றை விளக்க முயற்சி செய்தார். ஹெகலிய மெய்யியலானது பல பொருள்நிலைகளைக் கொண்டது. அதாவது இடைவிடாத பொருத்தம் உடையது. செயற்பாடுகள் வேறு ஏதாவது பொருத்தம் உடைய செயற்பாடு என பல நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளது.நேரானதை புரிந்து கொள்ள, எதிர்மறையான குணங்களைப் புரிந்துகொள்ள வேண்டும்.சிந்தனையினது வரலாறு விமர்சன கோட்பாடு ஆகும்.

ஹெர்பர்ட் மார்க்யூஸ் வாழ்க்கையில் முரண்பாடான விடயங்களையும் மற்றும் சமூக முறைமையின் பொதுவான விடயங்களையும் விமர்சன கோட்பாடு ரீதியாக சக்தி வாய்ந்த முறையில் தூண்டுகின்றார்.எதிர்மறையான இந்த ஹெகலின் கருத்து, மனித முயற்சியின் அத்தியாவசிய உண்மையைப் புரிந்துகொள்வதற்கான பயணத்தில் அனைத்து வி‘யங்களும் சுய முரண்பாடாக மார்க்சால் கையாளப்பட்டிருந்தன.

ஹெர்பர்ட் மார்க்யூஸ் ஹெகலின் விடுதலை மற்றும் இயங்கியல் பற்றிய மெய்யியல்சார் எண்ணக்கரு மற்றும் மார்க்ஸின் சமூக பொருளாதார அடிப்படையில் அமைந்த அந்நியப்பட்ட தொழிலாளர் எண்ணகருகளுக்கிடையில் இடையில் முக்கிய தொடர்பை பேணி அதனூடாக சமூக கோட்பாட்டின் முக்கிய இயக்கத்தை தோற்றுவித்தார். இது மார்க்யூஸின் சமூக கோட்பாட்டின் எழுச்சியில் ஒரு முக்கிய தருணமாக அடையாளம் காணப்பட்டது. ஆனால் ஹெகலின் ஊடாக மார்க்ஸின் மாற்றத்தை அனைத்து மத்தியதர வர்க்கத்தினரும் அறிந்து உண்மை ஒழுங்கின் முக்கிய வித்தியாசத்தை மாற்றத்திற்கு உற்படுத்தினார்(Marcuse, 1960, p.258) மார்க்ஸுக்கு, தற்போது இருக்கும் ஒழுங்கு அகற்றப்பட வேண்டும். ”யதார்த்தத்தின் எதிர்மறையானது” ஒரு ”சமூக நிலைமையாகிறது, இது ஒரு சமுதாயத்தின் குறிப்பிட்ட வரலாற்று



ISBN 978-955-627-120-1

வடிவத்துடன் தொடர்புடையது. (ி.258).மார்க்சின் பகுப்பாய்வு குறித்து மார்குஸின் குறிப்பிடத்தக்க விளக்கம் என்னவென்றால்,முதலாளித்துவ தவிர்க்க முடியாத மரணத்திலிருந்து சோசலிசத்திற்கான மாற்றம் தேவை என்று ஆகிறது '... தனி ஒருவருக்கு பூரணமான அபிவிருத்தி அவசியம் என்றார் (ி.317). ஹெர்பர்ட் மார்க்யூஸின் விமர்சன கோட்பாடும் கருத்தியலுக்கும் முதலாளித்துவத்தின் எதிர்மறைப் பாங்கினையும் கருத்தியலையும் அம்பலப்படுத்துவதற்கு அத்தியாவசியமானது.

சோவியத் மார்க்சிஸ்டுகள் தனிநபர்களின் வளர்ச்சிக்கான வழிகளில் செய்ததை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டியிருந்தது மார்க்சிசத்திற்கு மார்குஸின் சொந்த குறிப்பிட்ட பங்களிப்பு ஆகும்.மனித மற்றும் சமூகத் தேவைகள் முதலாளித்துவ இயங்கு முறையால் மறைக்கப்படுகிறது என்றார். அதனால் அவர் தனியாள் அபிவிருத்தியை வலியுறுத்தினார். இவருடைய இறுதிக் கட்ட செயற்பாடுகள் ஹெகலிய மார்க்சிச அஸ்திவாரத்திலிருந்து ஒரு புரட்சிகர திருப்பத்தை அவருடைய பிற படைப்புக்கள் வழங்குகின்றன. ப்ராய்டின் உளப்பகுப்பாய்வு ஊடாகவும் மனித தேவையைப் பெறுதல் என்ற புரட்சிகர செயற்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தின.

1920 இல் ஜார்ஜ் லூக்காக்ஸ் ஹெகல் தத்துவத்தை மார்க்ஸீயத்துக்குள் கொண்டுவந்து மார்க்ஸீயம் ஒரு முறைமையை (Method) மட்டுமே தருகிறது என்று விவாதித்தார். ''வரலாறும் வர்க்க உணர்வும்'' என்ற நூலை எழுதினார். பின்பு பிராங்க்பர்ட் மார்க்சீயர்கள் தோன்றினர். இவர்கள் பிராய்டின் உளவியல் ஆய்வுகளை ஏற்று மார்க்சீயத்துக்குள் உளவியல் உண்மைகளை இணைத்தனர். இவர்களில் ஒருவரான மார்க்யூஸ் சோவியத் யூனியன் இறுகிய ஒற்றைப் பரிமாண மனிதனை உருவாக்குகிறது என்றும் மத்தியதர வர்க்கமும் தொழிலாளி வர்க்கம் போல் புரட்சிகரமானதே என்றும் கருத்தை முன்வைத்தார். இவ்வணியைச் சார்ந்த அடார்னோ மற்றும் ஹொர்ஹேமர் ஆகியோர் மார்க்சியத்திலிருந்து அறிவொளிக்கால விஞ்ஞானவாதத்தை நிராகரிக்க வேண்டும் என்றும் தொழிலபிவிருத்தியின் மூலம் மட்டுமே புதிய சமூகம் படைக்கப்படும் என்பது உண்மை அல்ல என்றும் விவாதித்தனர். மேலும் இவர்கள் அறிவுவழி என்பதையும் கேள்வி கேட்டனர். மனிதகுலம் அறிவின் மூலமும் விஞ்ஞானத்தின் மூலமும் உலகை அழிக்கவும் முடியும் என்ற கருத்துக்களை உருவாக்கினர். சோவியத் ர்'யாவிலும் எங்கெல்ஸ் அவர்களிடமும் காணப்பட்ட இயங்கியல் (Dialectics) சார்ந்த ஹெகலின் கருத்தை இக்குழுவினர் ஏற்கவில்லை. எங்கெல்ஸ் இயங்கியலைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று ஏற்கனவே ஜார்ஜ் லூக்காக்ஸ் கூறிய குற்றச்சாட்டும் இங்கு நினைக்கத்தக்கது. அடுத்ததாக எக்ஸிஸ்டென்ஷியல் மார்க்சீயம் பிரான்சில் தோன்றியது. இதன்கருத்தை ழீன் பவுல் சார்த்தர் என்ற பிரான்ஸின் மெய்யியல் பேராசிரியர் விரிவுபடுத்தி நூல்கள் எழுதினார். இக்கருத்துக்களோடு முரண்பட்ட லூயி அல்துஸ்ஸர் என்ற பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரும் மெய்யியல் பேராசிரியருமான நிபுணர் தன் மெய்யியல்துறை மாணவர்களுடன் இணைந்து மார்க்ஸின் அறிவுவாதத்தையும் விஞ்ஞானத் தன்மையையும் வலியுறுத்தி நூல்கள் எழுதினர். இவருடைய மாணவர்கள் – இவரைப் போலவே – மாவோயிஸ்டுகளாக முதலில் இருந்து பின்பு தத்தம் வழியில் மார்க்சீய விளக்கங்களை இன்று கொடுத்து வருகின்றனர்.

**அந்நியமாதல் மற்றும் நாகரீகத்தின் விரோதபோக்கு: ப்ராய்ட் - மார்க்ஸ்**

